**<u>IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR</u>**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 725/2020 |
| நாள் | 26.02.2025 |
| வா.சா.2 | செங்குட்டுவன் |
| வயது | 51 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் டிப்ளமோ டீச்சர் டிரேயினிங் படித்துள்ளேன். இவ்வழக்கின் வாதி அனு டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் உமா என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த போது நானும்,எனது மனைவியுடன் சென்றிருந்தேன். பிரதிவாதி ராஜா செல்வக்குமார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் என்ன குறிப்பிட்டுள்ளார் என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். எனக்கும் எனது மனைவிக்கும் திருமணம் நடைபெற்று சுமார் 24 ஆண்டுகள் ஆகிறது. எனது மனைவி உரிமையாளராக உள்ள அனு டிரேடர்ஸ் நிறுவனம் ஆரம்பித்து சுமார் 10 வருடங்களுக்கு மேல் ஆக இருக்கும். பிரதிவாதியின் எங்கள் நிறுவனமும் டெக்ஸ்டைல் தொழில் செய்து வருவதால் எங்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டது. எனது மனைவி பிரதிவாதிக்கு என் மூலமாகதான் அறிமுகமானார். அவ்வாறான அறிமுகம் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாகவே நடைபெற்றது. தற்போது அனு டிரேடர்ஸ் நிறுவனம் நடைபெறவில்லை. சுமார் 4 ஆண்டுகளாக மேற்படி அனு டிரேடர்ஸ் நிறுவனம் நடைபெறவில்லை. அனு டிரேடர்ஸ் நிறுவனம் வியாபாரத்தை மட்டும் நிறுத்தி உள்ளது. நிறுவனத்தை முழுவதும் கலைக்கவில்லை. எனது மனைவியின் வங்கி கணக்கு முதலில் கரூரில் இருநது கோயம்புத்தூர் செல்லும் சாலையில் இருந்த இந்தியன் வங்கியில் இருந்தது. தற்போது, கரூர் செங்குந்தபுரம் 80 அடி சாலையில் உள்ள இந்தியன் வங்கியில் உள்ளது. எனது மனைவி வங்கி கணக்கு ஆரம்பித்த நாள் முதல் கடைசியாக வங்கி கணக்கை இயக்கிய நாள் வரை வங்கி கணக்கு மற்றும் கணக்கு வழக்குகளுக்கு உண்டான ஆவணம் என்னிடத்தில் உள்ளது. அனு டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனைவிக்கும்

தனித்தனியாக வருமான வரி கணக்கு உள்ளது. பிரதிவாதிக்கு கடன் கொடுத்தாக கூறப்படும் தொகை நிறுவனத்தின் வருமான வரி கணக்கிலும், நிறுவனத்தின் கணக்குகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நீதிமனற்த்தில் ஒப்படைப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. என்னுடைய பிரமாண வாக்கமூலத்தில் அனு டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு உண்டான கணக்கு வழக்குகளை நான் மேற்பார்வை செய்து, பராமரிக்கப்படும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனைவியும் அவர் தாக்கல்ெ சய்திருந்த பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறே குறிப்பிடடுள்ளார் என்றால் சரிதான். நான் இன்று இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கும் விவரம் எனது மனைவிக்கு தெரியும். என்னுடைய சாட்சியம் அவரையும் கட்டுப்படு்த்தக்கூடியது என்றால் சரிதான். பிரதிவாதி ராசா ஆர் டிரேடர்ஸ் என்ற பெயரில் கரூர் டவுன் எல்.ஜி.பி நகர் வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். நான் ஏ.ஆர்சி கார்மெண்டஸ், 13 ஏ பழனியப்பா தெரு , கரூர் என்ற முகவரியில் நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் சரிதான். ராசா ஆர் டிரேடர்ஸ் நிறுவனத்தில்இருந்து எங்கள் நிறுவனத்திற்கு வியாபார ரீதியாக துணி சப்ளை செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். .பிரதிவாதி நடத்தி வந்த ராசா ஆர் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் என்னுடைய நிறுவனத்திற்கும் சுமார் 3,4 ஆண்டுகள் மட்டும் வரவு செலவு இருந்தது. எந்த வருடம் என்று குறிப்பிட்டு கூறஇயலாது. கடந்த 2011 முதல் 2021 வரை ஏ.ஆர்சி கார்மெண்டஸ் நிறுவனம் என்னால் நடத்தப்பட்டு வந்தது. தற்போது நடத்தப்படாமல் உள்ளது. ஏ.ஆர்சி கார்மெண்டஸ் நிறுவனத்திற்கும், எனக்கும் தனித்தனியாக வருமான வரி கணக்கு உள்ளது. பிரதிவாதிக்கும் எனக்கும் இடையேநடைபெற்ற வியாபார ரீதியான கணக்கு வழக்குகளை இவ்வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வெங்கடேஷ் என்பவரின் வசிப்பிடம் 262 வையாபுரி நகர், 1வது குறுக்கு சந்து கரூர் என்ற முகவரியில் வசித்து வரும் நபர் மீது இதே நீதிமனற்த்தில் ஒரு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் வெங்கடேசன் என்பவர் 2 தவணைகளில் ரூ.1,50,000, ரூ60,000 ஆகீய தொகைகளை விஜயா வங்கி கரூர் காசோலையில் கொடுத்து அந்த தொகை திரும்ப செலுத்த படாததால் நான் மேற்படி அசல் வழகதை தாக்கல்ெ சய்தேன் என்றால் சரிதான். என்னிடத்தில் காட்டப்படும் ஆவணம் தான் நான் வெங்கடேசன் மீது தாக்கல் செய்த அசல் வழக்கிற்குண்டான ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம்

பி.த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படிஅசல் வழக்கின் வெங்கடேசன் என்பவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்கொண்டார் என்றும், வெங்கடேசன் தாக்கல் செய்த எதிர் வழக்குரை தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த எதிர் வழக்குரை பி.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் சென்னியம்பாளையம் என்ற முகவரியில் எஸ்.ஜி.வி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தை நடத்திவரும் முத்துசாமி மகன் பழனிவேல் என்பவரை எனக்கு தெரியும். அந்த பழனிவேல் என்பவருக்கும்எனக்கும் இடையே வியாபார ரீதியான வரவு செலவு இருந்தது என்றால் சரிதான். வெங்கடேஷ் மேற்படி எஸ்.ஜி.வி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. வெங்கேடஷ் என்பவர் ஏ.எம்.கே handloom என்ற நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். வெங்கேடஷ் என்பவர் பழனிவேல் நிறுவனத்தில் தான் கணக்காளராக பணிபுரிந்து வந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவியிடம் இருந்து பிரதிவாதி எந்த ஒரு காலக்ககட்டத்திலும் காசோலையின் மூலமாக தொகையை கடனாக பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்று நான் கூறுவதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் வரவு செலவு வைத்திருந்தசமயத்தில் என்னுடைய வங்கி கணக்கில் தொகை இல்லாததால் என் மனைவியின் காசோலை மூலமாப பிரதவாதியின் வங்கி கணக்கிற்கு தொகை கொடுக்கப்பட்டு நான் செலுத்த வேண்டிய தொகையை பிரதிவாதி செலுத்தி நேர் செய்துவிட்டேன் என்றும், தற்போது வாதியின் காசோலை பிரதிவாதியின் பெயருக்கு கொடுத்ததை அனுசரணையாக எடுத்துக்கொண்டு ஏதோ வாதியிடமிருந்து பிரதிவாதி காசோலையின் மூலமாக கடன் பெற்றதாக இவ்வழக்கை என் மனைவியின் மூலமாக தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி வாதி உமா என்பவருக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் என்ற உறவுமுறை இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவி வாதி பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதும், பிரதிவாதி என்னைஅனுகி கேட்ட போது, அந்த சட்ட அறிவிப்பின் பெயரில் நான் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கமாட்டேன் என்று பிரதிவாதிக்கு உறுதி அளித்ததின் பேரில் பிரதிவாதி பதில் சட்ட அறிவிப்புஎதுவும் வாதிக்கு கொடுக்காமல் இருந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மனைவி வாதி இவ்வழக்கில் சாட்சியம் அளித்த போது, ஒப்புக்கொள்ளப்பட்ட

சங்கதிகளை நீர்த்துபோவதற்காக இவ்வழக்கில் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொயயான சங்கதிகளை கூறி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி தாக்கல் செய்த வழக்கு பிரதிவாதிக்கு உண்டான செலவுத்தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.